# செய்தி அறிக்கை

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கொழும்பு ஹில்டன் நிறுவனத்துடன் இணைந்ததாக இந்த பத்திரிகை கழகத்தினை (PRESS CLUB) ஆரம்பித்துள்ளது.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கொழும்பு ஹில்டன் நிறுவனத்துடன் இணைந்ததாக பத்திரிகை கழகத்தை ஏற்படுத்துவதற்கான அனுசரணையாளராக செயற்படுவதற்கான உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் சார்பில் அதன் தலைவர் திரு. குமார் நடேசனும் கொழும்பு ஹில்டன் சார்பாக அதன் பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய பொது முகாமையாளருமான திரு. மனேஷ் பெர்னாண்டோ ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டல் பத்திரிகை கழக செயற்பாட்டிற்கான ஆதரவை வழங்குவதில் மிகவும் ஆர்வத்துடன் இயங்க இருப்பதோடு ஊடக செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது, வருகை தருகின்ற பிரமுகர்களை வரவேற்பது, தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப சமகால விடயங்களின் அடிப்படையிலான தலைப்புக்களை கருப்பொருளாகக் கொண்ட நிகழ்வுகளை நடத்துவது என்பன இதில் அடங்கும்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் கீழான பத்திரிகை கழகத்தின் செயற்பாட்டிற்கு இதன் பங்காளர்களான இலங்கை பத்திரிகை வெளியீட்டாளர்கள் சமாஜம், பத்திரிகை ஆசிரியர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் மற்றும் இணைந்த அமைப்புக்களான ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு மற்றும் ஊடக ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம் என்பன பூரணமான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன.